# அணி இலக்கணம்

பாடலில் அமையும் அழகு நலமே அணி எனப்படும்.

**இயல்பு நவிற்சி அணி**

உள்ளதை உள்ளவாறு இயற்கைத் தன்மை மாறாமல் அழகுபடக் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

**எ.கா;**

**எழுமை எழுப்பிறப்பும் உள்ளுவர் தங்கண்**

**விழுமம் துடைத்தவர் நட்பு.**

ஒரு காலத்தில் தமது துன்பத்தைப் போக்கியவரின் நட்பை ஏழு பிறப்பிலும் ஆன்றோர் நினைத்துக் கொண்டே இருப்பர்.

**உயர்வு நவிற்சி அணி**

இயல்பான ஒன்றை மிகவும் சிறப்பித்து அழகுபடக் கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

**எ.கா;**

**அமிழ்தினும் ஆற்ற இனிதேகம் மக்கள்**

**சிறுகை அளாவிய கூழ்.**

தம் குழந்தை தனது சிறிய கைகளால் பிசைந்த உணவானது அமிழ்தை விட
**பொருள்;**

குளத்தில் ஊர்ச் சிறு பிள்ளைகள் யானை மீது நீரை இறைத்தும் வெண்கொம்புகளைத் தழுவியும் விளையாடுவர். அந்த யானைக்கு மதம் பிடித்துவிட்டால் யாரும் பக்கத்தில் அணுக முடியாது. அதியமானும் அப்படிப்பட்டவன்தான் பரிசிலர்க்கு இனியவன். பகைவர்க்கு இன்னாதவர். இப்பாடலில் உவமை அணி பயின்று வந்தள்ளது.

**எடுத்துக்காட்டு உவமையணி**

உவமை தனி வாக்கியமாகவும் உவமேயம் தனி வாக்கியமாகவும் இருந்து உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணியாகும்.

**எ.கா;**

இனியது என்பது உயர்வு நவிற்சி அணியாகும்.

**உவமையணி**

ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அஃது உவமை அணியாகும். போல, புரைய, அன்ன, இன்ன, அற்று, இற்று, மான, கடுப்ப, ஒப்ப, ஊறழ போன்றவை உவம உருபுகளாக அமையும்.

**எ.கா;**

**பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**

**வரிசை வரிசையா நந்தும்.**

பெரியவர்களின் நட்பு பிறைநிலவுபோல வளரும் என்பது கருத்து.
**எ.கா;**

ஊர்க் குறுமாக்கள் வெண்கோடு கழாஅலின்

நீர்த்துறை படியும் பெருங்களிறு போல

இனியை கெரும எமக்கே மற்றதன்

துன்னரும் கடாஅம் போல

இன்னாய் பெரும நின் ஒன்றை தோர்க்கே

**ஔவையார். (புறநானூறு – 94–வது பாடல்)**

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**

**கற்றனைத் தூறும் அறிவு.**

தொட்டனைத் தூறும் மணற்கேணி – உவமை

கற்றனைத் தூறும் அறிவு – உவமேயம்

இவ்விரண்டிற்கும் இடையில் **போல** என்னும் உவம உருபு மறைந்து வந்து பொருள் தருகிறது.

**இல்பொருள் உவமையணி**

உலகில் இல்லாத பொருளை இருப்பது போல உவமையாக்கிக் கூறுவது இல் பொருள் உவமை அணி ஆகும்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு**

வான தாமரை போல்

விண்ணில் மலர்ந்து தாமரைப் போல் என்பது இதன் பொருள். விண்ணில் தாமரை முளைப்பதில்லை இது இல்பொருள் உவமையணி ஆகும்.

**அன்பகத் இல்லா உயிர் வாழ்க்கை வண் பார்க்க கண்**

**வற்றல் மறந்தளிர் தற்று.**

மேற்கண்ட குறளில் அன்பில்லாதவனின் வாழ்க்கை பாலை நிலத்தில் பட்டமரம் தளிர் விட்டு வளருவது போன்று என உலகத்தில் இல்லாத பொருளை உவமையாகக் கூறியமையால் இது பொருள் உவமை அணி ஆகும்.

**உருவக அணி**

உவமைக்கும் உவமையத்திற்கும் வேறுபாடு இன்றி, உவமையே பொருளாக வந்தால் அது உருவக அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு**

துன்பக் கடல், இன்ப வெள்ளம் துன்பத்தை துன்பம் என்று கூறாமல் அதை கடல் என உருவகம் செய்து **துன்பக்கடல்** என்று கூறுவது உருவக அணி ஆகும். இதில் உவமைய பொருள் முன்னும் உவமைப்பொருள் பின்னும் அமையும்.

துன்பம் – **உவமேயம்**

கடல் – **உவமை**

**எடுத்துக்காட்டு;**

இன்சொல் விளைநிலமா ஈதழே வித்தாக

வன்சொற் கலைக்கட்டு வாய்மை எருவட்டி

அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்

பைங்கூழ் சிறுகாலை செய்.

இப்பாடலில் இன்சொல்– நிலமாகவும், வன்சொல் – கலையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிர் ஆகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வையம் தகளியா வாற்கடலே நெய்யாக<br>வெய்ய கதிரோன் விளக்காகச்– செய்ய<br>சுடர் ஆழியான் அடிக்கு சூட்டினேன் சொல்மாலை<br>இடர் ஆழி நீங்குகவே என்று | இப்பாடலில் பூமி அகல் விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப் படுத்தப்பட்டுள்ளன. |

**ஏகதேச உருவக அணி**

செய்யுளில் ஒரு பொருளை உருவம் செய்துவிட்டு, அதற்குத் தொடர்புடைய மற்றப் பொருட்களை அதற்கேற்ப உருவகம் செய்யாமல் விட்டு விடுவதற்கு ஏகதேச உருவக அணி என்று பெயர்.

**எடுத்துக்காட்டு**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**

**இறைவனடி சேராத தார்**

இக்குறளில் பிறவியை கடலாக உருவப்படுத்தி, அதை கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப் படுத்தமையால் இஃது ஏகதேச உருவக அணி ஆகும்.

| | |
|---|---|
| **பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**<br>**கருமமே கட்டளைக் கல்.** | இக்குறளில் வள்ளுவர் மக்களின் செயல்களை பொன்னின் தரத்தை அறிய உதவும் உரைக்கல்லாக உருவகம் செய்துவிட்டு மக்களின் உயர்வையும் தாழ்வையும் |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| | பொன்னாக உருவகம் செய்யவில்லை எனவே இது ஏகதேச உருவக அணி ஆகும். |

**வேற்றுமை அணி**

ஏதேனும் ஓர் ஒற்றுமையுடைய இரு பொருள்களுக்கு இடையே வேற்றுமைக் கற்பித்து கூறல் வேற்றுமை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு**

**மோப்ப குழையும் அனிச்சம், முகத்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து.**

**ஒற்றுமை**

- அனிச்சமலர் மென்மையானது.
- விருந்தினர் மென்மையான தன்மை உடையவர்.

**வேற்றுமை**

- அனிச்ச மலரை நுகர்ந்து பார்த்தால்தான் வாடும்.
- ஆனால் முகம் மாறுபட்டு பார்த்தாலே விருந்தினர் வாடி விடுவர்.

**பிறிது மொழிதல் அணி**

புலவன் தான் கருதிய பொருளை அப்படியே கூறாமல் மறைத்து, அதை விளக்குவதற்கு அதைப் போன்ற பெரிதொன்றினை கூறி விளக்குவதற்கு பெரிது மொழிதல் அணி அல்லது ஒட்டணி என்று பெயர்.

**எடுத்துக்காட்டு**

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**

**சாலை மிகுத்துப் பெயின்**

மென்மையாக இருக்கும் மயிலிறகையும் அளவாக வண்டியில் ஏற்ற வேண்டும். மிஞ்சினால் வண்டியின் அச்சு முறியும் – இது கூறபட்ட கருத்து.

எந்த செயலையும் அளவாக செய்ய வேண்டும், அளவுக்கு மீறினால் அழிவு நேரிடும். – இது விளக்க வந்த கருத்து.

**நிரல்நிறை அணி**

சொற்களையும், பொருளையும் வரிசைப்படுத்தி அந்த வரிசைப்படி பொருள் கொள்ள வைத்தலே நிரல்நிறை அணியாகும்.

**எடுத்துக்காட்டு**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது.**

அன்பு அரண் இரண்டையும் முறையாக நிறுத்தி அன்பே பண்பு எனவும் ஹரனே பயன் எனவும் வரிசைப்படி கூறுதலின் நிரல்நிறை அணியாகும்

**வேற்றுப்பொருள் வைப்பணி**

ஒரு சிறப்பு பொருளை உலகம் அறிந்த பொதுப் பொருளின் துணை கொண்டு விளக்குவதற்கு வேற்றுப்பொருள் வைப்பது என்று பெயர்.

**எடுத்துக்காட்டு**

**சிறந்த ஒளிவளர்க்குந் தேரோன் – மறைந்தான்**

**இறவாது வாழ்கின்றார் யார் ?**

சிறந்த ஒளியை கொடுத்துக் கொண்டிருந்த கதிரவனே மறைந்து விட்டான்; இவ்வுலகில் இறவாமல் யார் வாழ்கின்றார் என்பது இதன் பொருள்.

இரவாது வாழ்கின்றவர் யார் – சிறப்பு பொருள்

சிறந்த ஒளியே வளர்க்கும் தேரோன் மறைந்தான் – பொதுப் பொருள்.

உரை முடிவு காணான் இளையோன் என்ற

நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை

கல்லாமல் பாகம் படும்.

இப்பாடலில் கரிகாலன் இளமையில் நரை முடித்து வந்து வழக்கில் நீதி வழங்கியமை என்பது சிறப்புச் செய்தி. வழி வழியாக நீதி தவறாமல் ஆட்சி புரிந்து வரும் சோழர் குளத்தில் தோன்றியமையால், இயல்பாகவே நீதி வழங்கினான் என்பது பொதுப்பொருள். சிறப்புப் பொருளால் பொதுப்பொருள் விளக்கப்பட்டுள்ளதால் இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

**<u>தற்குறிப்பேற்ற அணி</u>**

இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியின் மேல் புலவன் தன்னுடைய குறிப்பை ஏற்றிச் சுவைப்பட கற்பனையாக கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு**

**போருல தேடுத்த ஆறறையில் நெடுங்குடி வாரல் என்பன போல் மரித்து கைகாட்ட**

சிலப்பதிகாரம்

பாண்டிய மன்னனின் அரண்மனை மீது கட்டப்பட்டுள்ள மீன் கொடி காற்றில் இயற்கையாக அசைந்து பறந்து கொண்டிருக்கின்றது. இயற்கையாக நிகழும் இக்கொடியின் அசைவு மதுரை நகருள் நுழையவிருக்கும் கோவலனையும் கண்ணகியையும் பார்த்து நீ வீர் இங்கு வராதீர் என்று கையசைத்துக் கூறுவதைப் போன்று இருந்தது என புலவர் தன்னுடைய கருத்தை ஏற்றிக் கூறுகின்றார்.

**வஞ்சப்புகழ்ச்சி அணி**

ஒன்றினைப் புகழ்வதைப் போல புகழ்ந்து பழிப்பதும் பழிப்பதை போல பழித்து புகழ்வதும் வஞ்சக புகழ்ச்சி அணியாகும்.

**எடுத்துக்காட்டு**

**தேவர் அயனையர் கயவர் அவரும் தான்**

**மேவன செய் தொழுகை நான்**

இச் செய்யுளில் கயவறை தேவருக்கு ஒப்பாக கூறி புகழ்வது போல் பழிக்கப்பட்டுள்ளதால் இது வஞ்சி புகழ்ச்சி அணியாகும்.

**எடுத்துக்காட்டு**

பாரி பாரி என்று பல ஏத்தி,

ஒருவர் புகழ்வர், செந்நாப் புலவர்

பாரி ஒருவனும் அல்லன்.

மாரியு உண்டு, ஈண்டு உலகப் பிறப்பதுவே

**பொருள்**

புலவர் பலரும் பாரி ஒருவனை புகழ்கின்றனர்.பாரி ஒருவன் மட்டுமா கைமாறு கருதாமல் கொடுக்கிறான்? மாரியும் தான் கைமாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைக் காக்கிறது. பாரியை இகழ்வது போல புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. எனவே, இது வஞ்சப்புகழ்ச்சி அணியாகும்.

**இரட்டுறமொழிதல் அணி**

ஒரு சொல் அல்லது சொற்றொடர் இரு பொருள் படுமாறு கூறுவது இருட்டுற மொழிதல் அணி அல்லது சிலேடை அணி எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டிணமும்

காவலரைச் சூழும் கலைசையே.

இச்செய்யுளில் காவலர் என்னும் சொல் (கா + வலர்) எனப் பிரிந்து **காத்தலில் வல்ல அரசர்** என்று பொருள் தரும்.

**கா + அலர்** எனப் பிரிந்து நின்று **சோலையில் உள்ள மலர்** என்று பொருள் தரும்.

இவ்வாறு இரு பொருளில் வருவதால் இது இரட்டுறமொழிதல் அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு**

ஓடும் இருக்கும் அதனுள்வாய்
வெளுத்திருக்கும்

நாடுங் குலைதனக்கு நாணாது – சேடியே

தீங்காயது இல்லா திருமலைரா யன் வரையில்

தேங்காயும் நாயும் நேர் செப்பு.

இப்பாடல் தேங்காய், நாய் இரண்டுக்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளது.

**பொருள்**

- தேங்காயில் ஓடு இருக்கும்; தேங்காயின் உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும்; அது கோணல் இல்லாமல் குலையாக தொங்கும்.
- நாய் சில சமயம் ஓடிக்கொண்டும், சில சமயம் படுத்துக் கொண்டும் இருக்கும். அதன் வாய் மென்மையாக இருக்கும் குரைப்பதற்கு வெட்கப்படாது. (குலைப்பதற்கு)

**சொல் பின்வரு நிலையணி**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த ஒரு சொல் பின்னர் பல இடத்திலும் வந்து வெவ்வேறு பொருளைத் தருமாயின் அது சொல் பின்வரு நிலையணியாகும்.

**எடுத்துக்காட்டு**

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை.

இக்குறளில் **துப்பு** என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களை தருகிறது துப்பார்க்கு – உண்பதற்கு; துப்பு – நல்ல ; துப்பு – உணவு.

**பொருள் பின்வருநிலையணி**

ஒரு செய்யுளில் வேறு வேறு சொற்கள் அமைந்து ஒரே பொருளைத் தருமாயின் அது பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**எடுத்துக்காட்டு ; 1**

அவிழ்தன தோன்றி அலர்ந்தன காயா

நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்

விண்டண கொன்றை விரிந்த கருவிளை

கொண்டன காந்தள் குலை.

இதனில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன என்ற மூன்றும் வெவ்வேறு சொற்களாயினும் மலர்ந்தன என்னும் ஒரே பொருளை உணர்த்துவதால் இது பொருள் பின்வரும் நிலை அணியாகும்.

**எடுத்துக்காட்டு ; 2**

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**

**மாடல்ல மற்றை அவை.**

இக்குறளில் செல்வம், மாடு ஆகிய இருச் சொற்களும், செல்வத்தையே குறிக்கின்றன.

**சொற்பொருள் பின்வருநிலையணி**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால், அது சொற்பொருள் பின்வரும் நிலை அணியாகும்.

**எடுத்துக்காட்டு**

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு.

இக்குறட்பாவில் **விளக்கு** என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வரு நிலை அணியாகும்.

**மடக்கணி**

ஒரு செய்யுளில் ஒரு முறை வந்த சொல் அல்லது சொற்றொடர் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருளை தருமாயின் அது மடக்கனியாகும்.

**எடுத்துக்காட்டு**

அரிவையும் பாகத்தான் அரணொருமூன்
றேய்தோன்

அரிவையும் பாகத்தான் அகம்.

**அரி + வை + அம்பு + ஆக** – திருமால் கூர்மையான அம்பாக விளங்க எனவும்,

**(அரிவை + அம் + பாகத்தான்) –**அழகிய பார்வதியை ஒரு பாகத்தில் உடையவன் எனவும், இருவேறு விதமாக பிரிந்து பொருள் தருவதால் இது மடக்கனியாகும்.

**தீவக அணி**

ஓரிடத்தில் வைக்கப்பெற்ற விளக்கானது பல இடங்களில் சென்று பொருளைக் காட்டுவதுபோல் செய்யுளில் ஓரிடத்து வந்த ஒரு சொல் பல இடங்களுக்கும் சென்று பொருந்தி பொருளை விளக்குவதாலும், தீபம் போன்று செயல்படுவதாலும், **தீபக அணி** என்று பெயராயிற்று. பின்னர் மறுவி தீபக அணி என்றும் வழங்கலாயிற்று.

1. இது முதல் நிலை தீவகம்
2. இடைநிலைத் தீவகம்
3. கடைநிலை தீவகம் என மூன்று வகைப்படும்.

**எடுத்துக்காட்டு**

சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்

ஏந்து தடந்தோள் இழிகுருதி – பாய்ந்து

திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த அம்பும்

மிசையனைத்தும் புட் குலமும் வீழ்ந்து.

மன்னின் கண்கள் சினத்தால் சிவந்தன. அம்புகள் பட்டுப் பகை மன்னர் தம் தோள்கள் சிவந்தன. பெருகி வருகின்ற குருதியால் திசைகள் சிவந்தன. அம்புகள் சிவந்தன. குருதி மேலே தெரிப்பதால் பறவைகள் சிவந்தன. **சேந்தன** எனும் சொல் எல்லா இடத்தும் சென்று பொருளை விளக்குதல் இது தீவக அணி ஆயிற்று.

**இலேச அணி**

தன்னிடத்தில் தோன்றிய மெய்ப்பாட்டுணர்வை வேறொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துக் கூறுவது **இலேச அணியாகும்.**

**எடுத்துக்காட்டு**

கல்லுயர்தோள் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்

மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று – சொல்லுவரால்

பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள் சேர்ந்

தெங்கன் கலுழ்ந்தனவாள் என்று.

சோழ மன்னன் குதிரை ஏறி உலா வந்தான். அச்சோழனை கண்டதும் காதலால் ஒருத்தியின் கண்களிலிருந்து நீர் பொங்கியது. வினவிய தோழிக்கு சோழன் பின் சென்ற படைகளின் தூசி துகள்கள் தன் கண்ணில் விழுந்ததால் அங்கனம் ஆயிற்று என உண்மையை மறைத்து வேறொன்றை கூறியதால் இது **இலேச அணியாயிற்று.**

| அணிகளும் எடுத்துக்காட்டுகளும் | |
|---|---|
| உவமையணி | அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை<br>ஒழுக்கம் இலான்கண் உயர்வு. |
| உவமையணி | ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்<br>தாக்கற்குப் பேருந் தகைத்து. |
| உவமையணி | கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்<br>குத்தொக்க சீர்த்த இடத்து. |
| உவமையணி | குன்றேறி யானைப்போர் கண்டாற்றால் தங்கைத்தொன்<br>றுண்டாகச் செய்வான் வினை. |
| உவமையணி | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை<br>இகழ்வார்ப் பொறுத்தல் தலை. |
| உவமையணி | சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண் |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| | கலத்துநீர் பெய்தரீஇ யற்று. |
| உவமையணி | வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்<br>யானையால் யானையாத் தற்று. |
| உவமையணி | சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்<br>கோடாமை சான்றோர்க்கு அணி. |
| உவமையணி | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்<br>வைத்தூறு போலக் கெடும். |
| உவமையணி | நவில்தோறும் நூல் நயம் போலும் பயில் தோறும்<br>பண்புடையாளர் தொடர்பு. |
| உவமையணி | பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்<br>கலந்தீமை யால்திரிந்து அற்று. |
| பிறிது மொழிதல் அணி | கடல் ஓடா கால்வல் நெடுந்தேர் கடல் ஓடும்<br>நாவாயும் ஓடா நிலத்து. |
| பிறிது மொழிதல் அணி | கான முயல்எய்த அம்பினில் யானை<br>பிழைத்தவேல் ஏந்தல் இனிது. |
| இல்பொருள் உவமையணி | வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்<br>புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. |
| வேற்றுமை அணி | தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினால் சுட்ட வடு. |
| சொற்பொருள் பின்வருநிலையணி | செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்<br>செல்வத்துள் எல்லாம் தலை |
| சொற்பொருள் பின்வருநிலையணி | குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்<br>மிகைநாடி மிக்கக் கொளல். |
| உருவக அணி | அருளென்னும் அன்பின் குழலி பொருளென்னுஞ்<br>செல்வச் செவிலியால் உண்டு. |
| ஏகதேச உருவக அணி | பெருமைக்கும் ஏனையச் சிறுமைக்கும் தத்தம்<br>கருமமே கட்டளைக் கல். |
| ஏகதேச உருவக அணி | அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு<br>ஐந்துசால்பு ஊன்றிய தூண். |
| ஏகதேச உருவக அணி | ஊழிப் பெயரினும் தாம்பெயரர் சான்றாண்மைக்கு<br>ஆழி எனப்படு வார். |
| ஏகதேச உருவக அணி | உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது<br>எழுவாரை எல்லாம் பொருத்து. |

| | |
|---|---|
| தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே<br>துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி<br>அம்மா என்குது வெள்ளைப்பசு – உடன்<br>அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி<br>நாவால் நக்குது வெள்ளைப்பசு – பாலை | இப்பாடலில் பசுவும், கன்றும் ஒன்றோடு ஒன்று விளையாடுவதை இயல்பாக கூறியுள்ளார் கவிஞர். எனவே, |

www.tnpscgroup4.in

| | |
|---|---|
| நன்றாய் குடிக்குது கன்றுக்குட்டி. | இது **இயல்பு நவீழ்ச்சி அணி ஆகும்.** |

| | |
|---|---|
| குளிர் நீரில் குளித்தால் கூதல் அடிக்குமென்று<br>வெந்நீரில் குளித்தால் மேலே கருக்குமென்று<br>ஆகாசகங்கை அனல் உரைக்குமென்று<br>பாதாள கங்கையை பாடி அழைத்தார்<br>உன் தாத்தா. | ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி பாடியதால் **இஃது உயர்வு நிகழ்ச்சி அணியாகும்.** |

www.tnpscgroup4.in